25-02-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 30.03.1998

## அனைத்து பிராப்திகளையும் நினைவில் இமர்ஜ் (வெளிப்படுத்தி) செய்து உறுதியான மனநிலையை அனுபவம் செய்யுங்கள் மற்றும் ஜீவன் முக்தி அடையுங்கள்

இன்று பாக்கியத்தை உருவாக்கக்கூடிய வள்ளல் தனது உயர்ந்த பாக்கியசாலி குழந்தை களை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தைகளின் பாக்கியத்தின் மகிமையை சுயம் பகவான் அவரே பாடிக்கொண்டிருக்கிறார். தந்தையின் மகிமையை குழந்தைகள் பாடிக்கொண்டி ருக்கிறார். ஆனால் குழந்தைகளாகிய உங்களின் மகிமையை சுயம் தந்தையே பாடிக்கொண்டிருக் கிறார். இப்படி நாம் கனவில் கூட இத்தனை பெரிய உயர்ந்த பாக்கியம் உருவாகி இருக்கிறது என்பதை நினைத்தும் பார்க்கவில்லை. ஆனால் உருவாக்கப்பட்டுள்ளது. உருவாகிவிட்டது. உலகத் தினர் பகவான் நம்மை படைத்தார் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு கடவுளை பற்றி எதுவும் தெரியாது, படைப்பையும் பற்றியும் தெரியாது. நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளின் குழந்தை என அனுபவமும் இருக்கிறது, நாங்கள் சிவவம்சி மற்றும் பிரம்மா குமார், பிரம்மா குமாரி கள் என்று பெருமையுடனும் சொல்கிறீர்கள். நம்மை பாப்தாதா எப்படி படைத்தார் என்பது நமக்கு தெரியும். சின்ன குழந்தைகளாக இருந்தாலும் சரி, வயோதிக பாண்டவர்களாக இருந்தாலும் சரி, சக்திகளாக இருந்தாலும் சரி, உங்களுடைய தந்தை யார் என்று யாரிடம் கேட்டாலும் உடனே என்ன சொல்வார்கள்? சிவபாபா எங்களை பிரம்மா பாபாவின் மூலம் படைத்தார், ஆகையால் நாங்கள் பகவானின் குழந்தை என்று பெருமிதத்துடன் சொல்வீர்கள் அல்லவா. கடவுளை நேரடி யாக சந்திக்கிறோம், அவர் பரமாத்மா மட்டுமல்ல, கடவுள் நம்முடைய தந்தையாக இருக்கிறார், மேலும் தந்தையாகவும் இருக்கிறார், ஆசிரியராகவும் இருக்கிறார், சத்குருவாகவும் இருக்கிறார். அனைவருக்கும் இந்த நஷா இருக்கிறதா? (கை தட்டினார்கள்), ஒரு கையால் கை தட்ட வேண்டும் - இப்பொழுது இந்த ஒரு பயிற்சியை வயதானவர்களுக்கு கற்று தர வேண்டியிருக்கிறது. குழந்தைகளின் மகிழ்ச்சியை பார்த்து பாப்தாதாவும் கூட குஷியில் ஊஞ்சலாடுகிறார். மேலும் ஆஹா என்னுடைய ஒவ்வொரு சிரேஷ்ட பாக்கியசாலியான விசேஷமான ஆத்மாக்களே..... என்று எப்பொழுதுமே சொல்கிறார். தந்தை என்ற ரூபத்தில் பரமாத்மாவின் பாலனையை அனுபவம் செய்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்த பரமாத்மா பாலனை முழு கல்பத்தில் இந்த பிராமண பிறவி யில் மட்டும் தான் குழந்தைகளாகிய உங்களுக்கு கிடைக்கிறது. இந்த பரமாத்மா பாலனையில் ஆத்மாவிற்கு அனைத்து பிராப்தி சொரூபமும் அனுபவம் ஆகிறது. பாரமாத்மாவின் அன்பு அனைத்து சம்மந்தங்களையும் அனுபவம் செய்ய வைக்கிறது. பரமாத்மா அன்பு தேக உணர்வை யும் மறக்க வைக்கிறது, அதன் கூடவே பலவிதமான சுயமான அன்பையும் மறக்க வைக்கிறது. அப்படிப்பட்ட பரமத்மாவின் அன்பு, பரமாத்மாவின் பாலனைக்குள் இருக்கக்கூடிய பாக்கியசாலி ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். சுயம் பகவானே தனது வதனத்தை (இருப்பிடத்தை) விட்டு இறை மாணவர்களாகிய உங்களுக்கு படிப்பை கற்று தர வந்திருக்கிறார் என்றால் நீங்கள் எவ்வளவு பெரிய பாக்கியசாலிகளாக இருக்கிறீர்கள். தினந்தோறும் வெகுதொலைவிலிருந்து படிப்பிக்க வருகிறார்,

இப்படிப்பட்ட டீச்சரை எங்காவது பார்த்திருக்கிரீர்களா? இப்படிப்பட்ட டீச்சரை எப்பொழு தாவது பார்த்திருக்கிறீர்களா? ஆனால் குழந்தைகளாகிய உங்களுக்காக தினந்தோறும் பாபா ஆசிரியாராக மாறி உங்களிடம் படிப்பை கற்றுத்தர வந்திருக்கிறார். மேலும் எவ்வளவு எளிதாக கற்று தருகிறார். இரண்டு வார்த்தைகளில் படிப்பு அடங்கியிருக்கிறது. நீங்கள் மற்றும் பாபா (ஆப் மற்றும் பாப்) இந்த இரண்டு வார்த்தைகளை சக்கரம் என்றும் சொல்லாம், டிராமா என்றும் சொல்லாம். கல்ப விருட்சம் என்றும் சொல்லாம், முழுமையான ஞானமும் அடங்கியிருக்கிறது. மேலும் மற்ற படிப்பில் எவ்வளவு புத்தியின் மீது சுமை ஏற்பட்டுவிடுகிறது. பாபாவின் படிப்பின் மூலம் புத்தியும் இலேசாகி விடுகிறது. இலேசான தன்மையின் அடையாளம் உயர பறப்பது. இலேசான பொருட்கள் எப்பொழுதும் உயரத்தில் தான் இருக்கிறது. எனவே இந்த படிப்பின் மூலம் மனம் புத்தி பறக்கும் கலையை அனுபவம் செய்ய வைக்கிறது. அதனால் புத்தி இலேசாகி விடுகிறதல்லவா. மூன்று உலகத்தின் ஞானம் கிடைத்து விடுகிறது. எனவே இப்படிப்பட்ட படிப்பு முழு கல்பத்திலும் எவராவது படித்தீர்களா என்ன? படிப்பு சொல்லிக் கொடுக்கக்கூடியவர் இப்படிப்பட்டவர் இருக்கிறாரா? எனவே இது கூட பாக்கியம் தானே! மேலும் சத்குரு மூலம் அப்படிப்பட்ட ஸ்ரீமத் கிடைக்கிறது - என்ன செய்வது, எப்படி நடந்துக்கொள்வது, அப்படி செய்யட்டுமா, இப்படி செய்யட்டுமா, இந்த அனைத்து கேள்விகளையும் சதா காலத்திற்காகவும் முடித்துவிடுகிறது, என்ன செய்வது, எப்படி செய்வது அப்படி செய்யட்டுமா, இப்படி செயல்படட்டுமா..... இதுபோன்ற அனைத்து கேள்விகளுக்குமான ஒரே பதில் - ஃப்லோ பாதர் (தந்தையை பின்பற்றுவது) சாகார (ஸ்தூல) செயலில் பிரம்மா பாபாவை பின்பற்றுங்கள். நிராகர ஸ்திதியில் அசரீரி ஆவதில் சிவ பாபாவை பின்பற்றுங்கள். பாபா மற்றும் தாதாவை இருவரையும் பின்பற்ற வேண்டும் என்றால் அனைத்துவிதமான கேள்விகள் முடிப்பது மற்றும் ஸ்ரீமத் படி நடப்பது. இது கடினமாக இருக்கிறதா? கேட்பதற்கான அவசியம் இருக்கிறதா என்ன? ஃகாபி (நகல்) செய்ய வேண்டும். தனது புத்தியை பயன்படுத்த வேண்டாம். பாபாவிற்கு சமமாவது என்றால் தந்தையை பின்பற்றுவது. கடினமாக இருக்கிறதா அல்லது எளிதாக இருக்கிறதா? சுலபமாக தானே உள்ளது? இப்பொழுது பாருங்கள் 30 வருடங்களாக இருப்பவர்கள் கை தூக்குங்கள், 30 வருடங்களாகஇருப்பவர்களுக்கு கடினமாக உள்ளதா அல்லது எளிதாக உள்ளதா? எளிதாக இருக்கிறது என்றால் யாரெல்லாம் பின்னால் வந்திருப்பவர்களுக்காக கடினமாக இருக்குமா? அல்லது எளிதாக இருக்கிறதா? எளிதாக இருக்கிறது அல்லவா? (வெப்பத்தின் காரணமாக அனைவருடைய கைகளிலும் பல வண்ணங்களில் விசிறியை அசைந்து கொண்டிருந்தது) நல்லது, விசிறிகளின் ரிம்ஜிம் (தூரல்) மிக அழகாக இருந்தது. காட்சி நன்றாக இருக்கிறது அல்லவா? புதுமைத் தன்மை வேண்டும் அல்லவா? எனவே இந்த குரூப்பின் புதுமைத் தன்மையாக இருக்கிறது. இதுவும் கூட டி.வியில் வந்து விட்டது. நல்லது அனைவரும் ஓடி ஓடி வந்து சேர்ந்துவிட்டீர்கள். பாப்தாதாவும் கூட அன்பினுடைய வாழ்த்துக்களை கொடுக்கிறார். பாருங்கள், எல்லைக்குட்பட்ட குருமார்களாக இருப்பவர்கள் கூட எவ்வளவு ஆசீர்வாதங்களை கொடுக்கிறார்கள். ஒன்று அல்லது பத்து, அதற்கு மேல் தருவது இல்லை. ஆனால் உங்களுக்கு சத்குரு தினந்தோறும் வரதானங்களை கொடுக்கிறார்.. இப்படிப்பட்ட குருவை பார்த்திருக்கிறீர்களா? பார்த்தது இல்லை அல்லவா? நீங்கள் மட்டும் தான் பார்க்கிறீர்கள். ஆனால் கல்ப - கல்பமாக

பார்க்கிறீர்கள். எனவே சதா தன்னுடைய பாக்கியத்தின் பிராப்திகளை முன்னால் வையுங்கள். புத்தியில் மறைத்து வைக்காதீர்கள். இமர்ஜ் (வெளிப்படுத்துங்கள்) செய்யுங்கள். மறைத்து வைக்கும் சம்ஸ்காரத்தை மாற்றி வெளிக்கொண்டு வாருங்கள். தனது பிராப்திகளின் லிஸ்ட்டை சதா புத்தியில் வையுங்கள். பிராப்திகளின் லிஸ்ட் வெளிப்பட்டு விட்டால் எப்படிப்பட்ட தடைகளும் ஃபோர் செய்யாது (விக்னம், சண்டை). சண்டைகள் மறைந்து போய்விடும், பிராப்திகள் இமர்ஜ் ஆகிவிடும்.

இன்று ஏதோவொரு காரணத்தினால் ஒரு சில குழந்தைகள் ஏதோ முயற்சி (கடின உழைப்பு) செய்கிறார்கள். யுத்தம் செய்கிறார்கள், யோகம் செய்ய விரும்புகிறார்கள், ஆனால் யோகா வரவில்லை, ஆத்ம உணர்விற்கு பதிலாக தேக உணர்வில் வந்துவிடுகிறார்கள், இது பாப்தாதாவிற்கு பிடிப்பதில்லை, காரணம் என்னவாக இருக்கும்? தனது பாக்கியத்தின் பிராப்தி நினைவில் வருவதில்லை. மறைவாகவே இருக்கிறது. பிறகு யாராவது நினைவுப்படுத்தினால் அப்படி இருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.... ஆகையால் சகஜமான முயற்சி - பிராப்திகளை நினைவில் வையுங்கள். எப்பொழுது பிராமணன் ஆனோமோ, அதிலிருந்து தனது பாக்கியத்தை நினைவில் வையுங்கள். குழப்பத்தில் வராதீர்கள். உறுதியாக இருங்கள். ஏனெனில் நினைவு சின்னமாக அபுவில் என்ன இருக்கிறது? அச்சல்கர் (ஆடாத) அல்லது ஹல்சல் கர் (ஆடும்) ? அச்சல் கர் தான் இருகிறதல்லவா? அது யாருடைய கர் (வீடாக) இருக்கிறது? உங்களுடைய நினைவு சின்னம் தான் அல்லவா? எனவே எப்பொழுதெல்லாம் சூட்சமமான முயற்சி செய்வது கடினமாக தோன்றுகிறதோ, புத்தி அதிகமாக குழப்பத்தில் வருகிறது என்றால் தனது நினைவு சின்னத்தை நினைவில் கொண்டு வாருங்கள். பல முறை குழந்தைகள் நான் ஆத்மா, டிராமா, இது ஒரு தடையாக இருக்கிறது, இது ஒரு காட்சியாக இருக்கிறது, என்று ஞானத்தின் கருத்துக்களை சொல்லிக் கொண்டும் இருக்கிறார்கள், அசைந்துக் கொண்டும் இருக்கிறார்கள். ஆடிக் கொண்டே சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். எப்பொழுதெல்லாம் அந்த மாதிரி புத்தி ஆகிவிடுகிறதோ, நிலையாக இருக்க முடியவில்லையென்றால், மதுபன் அச்சல் கர் - ஐ நினைவில் வையுங்கள். இது ஸ்தூலமான பொருளாக இருக்கிறதல்லவா. சூட்சமமானதாக இல்லை. கண்களின் மூலம் பார்க்கும் பொருள் அல்ல. என்னுடைய நினைவு சின்னம் அச்சல்கராக இருக்கிறது. குழப்பமான கர் - என்று இல்லை, ஏனெனில் பாப்தாதா இந்த வருடத்தை அனைத்து குழந்தைகளுக்காக முக்தி வருடமாக கொண்டாட விரும்புகிறார்கள். கைகளை உயர்த்துங்கள் என்றால், சிலர் கைகளை உயர்த்துவார்கள், சிலர் கைகளை உயர்த்துவதில்லை என்று அப்படி இல்லை. அனைவரும் குஷி - குஷியோடு கைகளின் கை தட்டல் செய்கிறார்கள். (அனைவரும் கை தட்டினர்). இப்பொழுது நன்றாகவே கையை தட்டுங்கள். ஆனால் அதுபோல தான் பாப்தாதா இந்த வருடம் இறுதியில் இந்தளவு வேகமாக கையை தட்டியதை பார்ப்பார். இப்பொழுது கை தட்டியது நன்றாக இருந்தது, ஆனால் இன்னும் கைகள் தட்டுவது ஒலிக்க வேண்டும். கை தட்டுவீர்களா? கைகளை தட்டி குஷி செய்து விட்டீர்கள் பாருங்கள், ஆனால் பாப்தாதா புது வருடத்தில் தனது 18 ஜனவரி விசேஷமாக பிரம்மா பாபா உடலிலிருந்து (சரீரம்) விடுபட்ட நாளாக இருக்கிறது, எனவே 18 ஜனவரி அன்று பாப்தாதா திரும்பவும் கையை உயர்த்த வைப்பார், முக்தி வருடத்தை கொண்டாடினீர்களா? அல்லது யோசனை

செய்தீர்களா? கொண்டாட வேண்டும், கொண்டாட வேண்டும் - யோசிப்பதை நிறுத்து வதில்லை. சொரூபத்தில் கொண்டு வந்தீர்களா அல்லது யோசித்துக் கொண்டே இறுதியிலும் யோசித்துக் கொண்டே இருப்பீர்களா? இந்த ரிசல்ட்டை பாப்தாதா பார்க்க விரும்புகிறார். செய்து காட்டுவீர்களா. நல்லது. நினைவில் இருக்குமல்லவா. பிராப்திகளை முன்னால் வையுங்கள். பாபாவின் நினைவின் கூடவே, பாபா என்ன கொடுத்தாரோ, அதை இமர்ஜ் (வெளிப்படுத்துங்கள்) செய்யுங்கள். என்ன செய்தீர்கள், மேலும் என்ன கிடைத்தது.

பாப்தாதா இந்த வருடத்திற்கு பிறகு ஒவ்வொரு குழந்தைகளையும் ஜீவன் முக்தியின் ஸ்த்தியில் பார்க்கிறார், எதிர்காலத்தில் ஜீவன்முக்தி அடைவோம், ஆனால் ஜீவன்முக்தி சம்ஸ்காரம் இப்பொழுது தான் இமேர்ஜ் (வெளிப்படுத்த) செய்ய வேண்டும், மேலும் நிரந்தர யோகியாக, நிரந்தர சகஜயோகியாகவும், நிரந்தரமாக விடுபட்ட ஆத்மாவின் சம்ஸ்காரத்தை இப்பொழுதிலிருந்து அனுபவத்தில் கொண்டு வாருங்கள் ஏன்? நேரத்தின் மாற்றம் மாற்றம் உலகத்தை மாற்றக்கூடிய உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது என்பதை பாப்தாதா முன்னதாகவே இசாரா (சமிக்ஞை) கொடுத்திருந்தார். இயற்கையின் தலைவனாகிய ஆத்மா களாகிய உங்களுக்காக வெற்றி மாலையை எடுத்துக் கொண்டு இயற்கை வரவேற்றுக் (காத்துக்) கொண்டிருக்கிறது. வெற்றியின் மணியை ஒலிப்பதற்காக எதிர்கால இராஜய அதிகாரியாகிய உங்களின் உத்தரவுக்காக எப்பொழுது மணியை ஒலிக்க வேண்டும் என்று காலம் பார்த்துக் கொண்டிருக்கிறது. எப்பொழுது நம்முடைய தேவ ஆத்மாக்கள் நம்மீது மகிழ்ச்சியடைந்து நமக்கு பக்தியின் ஆசீர்வாதம் கொடுப்பார்கள் எப்பொழுது துக்கத்தை நீக்கி சுகத்தை தரக்கூடிய ஆத்மாக் கள் வெளிப்படுவார்கள் என்று பக்த ஆத்மாக்கள் அந்த தினத்திற்காக நினைவு செய்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆகையால் இவர்கள் அனைவரும் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள், மற்றும் வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கருணை மனமுடையவரே, உலகத்திற்கு நன்மை செய்யக் கூடிய ஆத்மாக்களே, எனவே இது போன்று காத்துக் கொண்டிருக்கிருக்கின்ற ஆத்மாக்களின் வேண்டுதலை முடியுங்கள். உங்களுக்காக அனைத்தும் நின்று கொண்டிருக்கிறது. நீங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு விட்டால், அனைத்து ஆத்மாக்களும், இயற்கை, பக்தர்களுக்கு முக்தி கிடைத்து விடும். எனவே விடுப்பட்டவர் ஆகுங்கள், முக்தியின் தானத்தை கொடுக்கக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுங்கள். இப்பொழுது உலக மாற்றத்திற்கான பொறுப்பின் கீரிடம் தரித்தவர் ஆகுங்கள். பொறுப்பு இருக்கிறதல்லவா. பாபாவிற்கு உதவியாளர்களாக இருக்கிறீர்கள். என்ன உங்களுக்கு இரக்கம் வரவில்லையா. மனதில் துக்கத்தின் புலம்பல் கேட்க (உணர) வில்லையா! உலகத்தை மாற்றக்கூடிய ஆத்மாக்களே இப்பொழுது தனது முடிசூட்டு விழாவை கொண்டாடுங் கள்.

100 இமயமலையை போன்ற மிகப்பெரியதிலும் பெரிய தடைகள் வந்தாலும் கூட நகர்த்த முடியாது, இழக்கவும் மாட்டார்கள், என்பதை பாப்தாதா முன்னதாகவே சொல்லியிருக்கிறார். முடிசூட்டு விழாவை அவசியம் கொண்டாட வேண்டும். பாப்தாதா தினந்தோறும் சார்டை பார்க்கிறார். இங்கிருந்து சென்று இரயிலில் சொல்கிறீர்கள் - தெரியவில்லை என்ன நடக்குமென்று என்று சொல்லாதீர்கள். வீட்டிற்கு சென்ற பிறகு கொக்கு மற்றும் அன்னபறவை இரண்டிற்கும் இடையே

சண்டை ஏற்படுகிறது. இது நடந்துவிட்டது, இது நடந்துவிட்டது என்று சொல்லாதீர்கள். இதை சொல்ல மாட்டீர்கள் தானே. உங்களுடைய கடிதங்கள் அனைத்தையும் தேவையற்ற பெட்டியில் (வேஸ்ட் பாக்ஸ்) போடப்படும். கேட்கப்படுவது இல்லை. உறுதியான எண்ணங்களை கொண்டு வாருங்கள் - நடந்தே தீர வேண்டும். எங்கு உறுதித் தன்மை இருக்கிறதோ, அங்கு வெற்றி கிடைக்கவில்லை என்பது அசம்பவமானது. எனவே அனைவரும் உறுதியான எண்ணம் உடையர்கள் தானே. டீச்சர்ஸ் கைகளை உயர்த்துங்கள், நிறைய டீச்சர்ஸ் வந்துள்ளீர்கள். அனைவரும் சென்டரை காலி செய்துக் கொண்டு வந்து விடுவீர்களா என்ன?

பாருங்கள் ஒரு குஷியான விஷயத்தை சொல்கிறார், பாப்தாதா பார்க்கிறார், இப்பொழுது பார்த்தார். அனைத்து மதுபனை சேர்ந்தவர்களும் தன்னுடைய மாற்றத்திற்கான இலட்சியம் மிக நன்றாக வைத்திருக்கிறார்கள் என்பதை கேட்கிறார். இலட்சணங்களை பார்க்கிறார், ஆனால் இலட்சியம் மிக நன்றாக வைக்கிறார். தனக்குள் என்ன இருக்கிறதோ, அதை எழுதியிருக்கிறார், ஆனால் பாப்தாதா விற்கு குஷி உள்ளுக்குள் வருவது ஆரம்பமாகிறது. போகப்போக வந்து கொண்டே இருப்பார்கள். ஆனால் அனைவரிடமும் தன்னுடைய உறுதியான எண்ணங்களின் ஊக்கம் - உற்சாகம் நன்றாகவே தென்படுகிறது. இப்பொழுது காகிதத்தில் இருக்கிறது, ஆனால் காகிதத்திலும் கூட முதலாவது அடியாக இருக்கிறது. எனவே பாப்தாதாவிற்கு குஷி ஏன் ஏற்பட்டது? முழு உலகத்திற் காக மதுபன் நிவாசிகள் அர்ஜுனாக இருக்கிறார்கள். நிமித்தமாக மதுபன் நிவாசிகள் இருக் கிறார்கள். இரண்டாவது நம்பர் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் நிமித்த சேவாதாரிகளின் டீச்சர்ஸ் இருக்கிறார்கள். மேலும் அனைத்து சகயோகியான துணையாக முழுமையான பிராமண குடும்பம், பிராமண ஆத்மாக்களாக இருக்கிறார்கள். எனவே மதுபன் வரைபடத்தை பாப்தாதா பார்க்கிறார் - முற்றிலும் மாறுபட்டதாக தென்படுகிறது. மதுபனை சேர்ந்தவர்கள் குறைவாகத் தான் வந்துள்ளார் கள். பலர் எழுதவே இல்லை. முன்னால் அமர்ந்திருப்பவர்கள் மிகவும் குறைவாக எழுதியிருக் கிறார்கள். மிகவும் பிஸியாக இருக்கிறார்கள். ஆனால் வேலை கிடைக்கிறது என்றால் எழுதுவதில் மதிபெண் சேமிப்பாகிறது. ஒருவேளை எழுதவில்லையென்றால் மதிப்பெண் மிகவும் குறைந்து விடும். நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். என்னவெல்லாம் டைரக்ஷன் கிடைக்கிறதோ, நேரடி பாபா வின் மூலம் கிடைக்கிறது. நிமித்த ஆத்மாக்களான தாதிஜியின் மூலம் கிடைக்கிறது, அவர்களுக்கு மதிப்பு தருவது மிகவும் அவசியமாகும். இதில் சாக்குபோக்கு சொல்லக்கூடாது, அலட்சியமாக இருக்கக்கூடாது. வருங்காலத்திற்காக பாப்தாதா சொல்கிறார் - மதிப்பெண் சேமிப்பாக வில்லை. ஆகையால் இவர்களுக்கு மக்த்துவம் கொடுக்க வேண்டும் அதாவது மகான் ஆக வேண்டும். சாதாரணமாக பேச வேண்டாம். குழந்தைகள் மிகவும் சாதுர்யமானவர்கள். பாப்தாதாவிற்கு தெரியும் எனச் சொல்வார்கள் அல்லவா. தெரியும், ஆனால் சொன்னது ஏன்? தெரிந்திருந்தாலும் சொல்வது என்ன? எனவே அப்படியே விட வேண்டாம். அதிகமான செயல் அப்படி இருக்கிறது, சிறியவர்களில் யாருக்கு ஹான் ஜி (சரி செய்கிறேன்) என்று சொல்வதில் அதிகப்படியான மதிபெண் கிடைக்கிறது. பல மாணவர்கள் அதுபோல இருக்கிறார்கள் அவர்கள் ஏதாவது கடந்த காலத்தின் சம்ஸ்காரத்திற்கு வசப்பட்டு மிகவும் ஊக்கம் -உற்சாகத்தில் முன்னேற்றம் அடைகிறார் கள், ஆனால் ஏதாவதொரு தங்க நூல் இலை, மிக மெல்லிய நூல் இலை, அவர்களை

முன்னேற விடுவதில்லை. இந்த மெல்லிய நூல் இலை இருக்கிறது என்று புரிந்து கொள்கிறார்கள், ஆனால்... ஆனால் என்று சொல்கிறார்கள்.. அப்படிப்பட்ட முயற்சி யாளர்களும் இருக்கிறார்கள்- சிறு சிறு விஷயத்தில் சரி செய்கிறேன் என்று சொல்லி மதிபெண்னை சேமித்து விடுகிறார்கள். அந்த சின்ன சின்ன மதிபெண்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் முன்னால் வர முடியும். அதுபோல பாப்தாவும் கூட உதாரண ரூபத்தில் இருக்கிறார். ஆகையால் எளிய முறையில் சின்ன சின்ன விஷயத்திற்கு சரி என்று சொல்லி மதிப்பெண்களை சேமியுங்கள். துண்டித்து விடாதீர்கள், சேமியுங்கள். மற்றபடி பாப்தாதா பார்க்கிறார் பலருக்கு ஊக்கம் - உற்சாகம் நன்றாக தென்படுகிறது. ஆகையால் திடமான எண்ணத்திற்காக விசேஷமாக மதுபன் நிவாசி குழந்தைகளைப் பாப்தாதா ஹான் ஜி செய்வதற்கான வாழ்த்துக்களை தருகிறார். அன்பு நினைவுகளையும் தருகிறார். பல இலட்ச மடங்கு அன்பு நினைவுகளை தருகிறார். ஏன்? மதுபன் என்பது பாப்தாதாவை வெளிப்படுத்து வதற்கான கண்ணாடி மாளிகை. எனவே ஒன்று குஷியின் விஷயமாக இருக்கிறது, இப்பொழுது காகிதத்தில் எழுதியுள்ளீர்கள். அதை செயலில் கொண்டு வர வேண்டும். சரியா, நல்லது வாழ்த்துக் களை தருகிறார்.

இப்பொழுது ஒருவேளை உங்கள் அனைவருக்கும் திடீரென்று இப்பொழுதே அசரீரி ஆகிவிடுங்கள் என்று டைரக்ஷன் கிடைக்கிறது என்றால் ஆக முடியுமா அல்லது குழப்பம் ஏற்படுமா? ஏன்? கடைசி நேரத்தில் இந்த பயிற்சி தான் பாஸ்வித் ஹனராக மாற்றும். எனவே இப்பொழுது பாப்தாதா சொல்கிறார் ஒரு நொடியில் அனைத்து விஷயங்களிலிருந்து விடுப்பட்டு அசரீரி ஆகுங்கள். (டிரில்) நல்லது.

நாலா பக்கமுள்ள மிகவும் சிரேஷ்ட பாக்கியசாலியான, பரமாத்மாவின் பாலணைக்கு உரிமை யாளரான ஆத்மாக்களுக்கு, பரமாத்மாவின் படிப்பிற்கு உரிமையாளரான, பரமாத்மா சத்குருவின் வரதானங்களுக்கு அதிகாரி யான, சதா திடத்தன்மையின் மூலம் வெற்றிக்கு அதிகாரியான, சதா அகண்ட (துண்டிக்கபடாத) யோகி, அசல் (அசையாத) யோகி, சதா உலக மாற்றத்திற்கான பொறுப்பின் கீரிடதாரியான, சதா அனைத்து பிராப்திகளை இமர்ஜ் ரூபத்தில் அனுபவம் செய்யக் கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

இப்பொழுது முக்தி வருடத்தில் நம்பர் ஒன்னாக இருப்பது மதுபன் நிவாசிகள். சரியா? முடியுமா அல்லது கடினமா? (ஹான் ஜி) ஆனாலும் கூட பாப்தாதா மதுபனை சேர்ந்தவர்களுக்கு கோல்டன் பேட்ஜ் தருகிறார். மதுபனை சேர்ந்தவர்களுக்கு பேட்ஜ் தரவேண்டும், மேலும் அனைவருக்கும் கொடுக்கிறார், மதுபனை சேர்ந்தவர் களுக்கு முக்தி வருடத்தின் வெகுமதியை தருகிறார். நல்லது உங்களுக்கு பேட்ஜ் கொடுக்கப்படும். நல்லது.

வரதானம் : பிராமண வாழ்க்கையில் ஒரு பாபாவை தனது உலகமாக மாற்றக்கூடிய இயல்பான மற்றும் சகஜயோகி ஆகுக.

பிராமண வாழ்க்கையில் அனைத்து குழந்தைகளின் உறுதிமொழியாக இருக்கிறது - ஒரு பாபாவை தவிர வேறு யாருமில்லை, உலகமே பாபா என்று ஆன பிறகு, வேறு யாருமில்லை என்றால் இயல்பாகவே மற்றும் சகஜ யோகி மனநிலை சதா இருப்பதில்லை. ஒருவேளை

வேறு யாராவது இருக்கிறார்கள் என்றால் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது, இங்கு புத்தி வரக்கூடாது, அங்கு தான் செல்ல வேண்டும். ஆனால் ஒரு பாபா தான் அனைத்தும் என்றால் புத்தி வேறு எங்கு செல்ல முடியும். அப்படிப்பட்ட சகஜயோகி, சகஜ சுயராஜ்ய அதிகாரி ஆகிவிடுகிறார்கள். அவர்களின் முகத்தில் ஆன்மிகத்தன்மையின் ஜொலிப்பு ஒரே இரசனையில் ஒன்று போலவே இருக்கும்.

சுலோகன்: பாபாவிற்கு சமமாக அவ்யக்த மற்றும் விதேஹி ஆவது - இது அவ்யக்த பாலனையின் வெளிப்படையான நிரூபணமாகும்.